வந்தநவகோடிசித்தர்சாபமெல்லாம். பின்னையேபிரிமுறுக்காயோ
டிப்போச்சு பிணிமயக்கிப்பச்சிலையைப்பேணித்தானே (௱௪௯)

பேணியேசிரஞ்சீவிபருசஞ்சீவி பிடார்மூக்கியிலைப்போலே
சிறுசாய்நிற்கும், பாணியின்மேற்படர்ந்துமேபாரைமீது பட
ருமடாசாரணைபோல்காய்ப்பூவில்லை, தாணிவளுமலையருகேவட்ட
ப்பாறைதன்னிவோராயிரம்பூவிருக்கும்,காணியென்னகாப்பாத்த
போருயங்கே கண்மூலிகாணிகாப்பாத்துந்தானே. (௱௫௰)

காப்பாத்ததிருமலைமேலேறிவந்து கர்த்தாவைதெரிசித்துமண்
டலந்தானப்பா, பார்ப்பாத்திபெற்றமகன்பிரமதேவன் பண்
ணிவிட்டபிணிமயக்கிப் பார்க்கவேண்டி, நாட்பார்த்துச்சித்திரை
க்குச்சித்திரைநாள் தவசித்தர்நதியாடிதுதிக்கவேண்டி, வாட்பாச்
சுசித்தரங்கேவருவாரப்பா மண்டலத்திற்காணலாஞ்சித்தர்சேர்வை.

சித்திரைநீசேர்வைசெய்வாய்நவசித்திரைக்கு செப்புவேன்வி
ஞ்சையைசெவிப்பாலக்ஷம், புத்தரைநீபொலிக்காதேநீறுபூசி புலி
த்தோலுந்தானுடுத்திபிரம்புசாத்தி, ருத்திராக்ஷமணிச்சூட்டிமவுலி
போலே யோகத்திலிருப்பாநீயாரென்பார்கள், பத்தரைப்போல்
தொழுதிருந்துதெண்டனிட்டால் பார்மீதோவரைமீதோ பதியெ
ன்பாரோ. (௱௫௨)

என்பளவிலுண்ணியொருமவுலிபோலே யிருவப்பாஞானதிஷ்
டியாலேபார்ப்பார், பொன்பழகியாசித்தாற்பிணிமயக்கிப்பூட்டி

போனகத்திலிருக்குதென்றுபுகலுவார்கள், அன்பனேபோவென் பார்தெண்டநிட்டு யவர்களைநீயனுப்பயிலேகெதிதாயென்று, து ன்பவினைதீருமென்று தொழுவாயப்பா சோராமல்போவென்று சொல்லுவாரே. (௱௫௩)

சொல்லுவார்மூலிகைக்குவயணமெல்லாம் தெண்டனென்று கொண்டாடியுள்ளேசெய்தி, கல்லூழிகாலமடா மூலிதின்றால் கதி ரவன்போலிருக்குமடாதேகந்தங்கம், கொள்ளுவார்கருவிபடாரு டம்புவச்சிரம் கூத்தநில்லைப்பிணியில்லைகொடுபோயில்லை, கல்வி னால்மிருகத்தால்மரணமில்லை காசினியிலிருந்தாலுங்கண்டுபாரே()

சர்வவியாதிக்குமந்திரம்.

கண்டுபாருன்னுடையகையினாலே காசினியிற்பிணியாளர் சிரசுதொட்டு, 'சொண்டுதான்வருவாநீநசியென்றோது குவலயத் திற்பிணிப்பேய்களெல்லாம்போச்சு, பண்டுபார்பண்டிதமுமிது வேயாச்சுப் பணமென்னகேட்டதெல்லாங்கையிலீவார், உண்டுபா ருன்னுடையமும்மலத்தா லோகமெல்லாம்பொன்னாச்சு யூழிகா லம். (௱௫௫)

ஊழியூழிகாலமடாகற்பந்தின்றால் உன்தேகம்வயிரமடாமூ லியாலி, காளிமயிடாசுரனைசெயிக்கப்போனால் கர்த்தாவினுத்த ரவால்மூலிதின்றால், ஆளியினியேறியரிவாகைபூண்டால் அம்பல மெல்லாம்பொன்னா யாடினாள்பார், தோளிபட்டாவிஷ்ணுவின்பி ணிமயக்கிச் சூர்ப்பநகையண்ணன்மகன்படைக்குத்தானே(௱௫௬)

படையிலிந்திரஜெயித்துவிட்டபிர்ம்மாஸ்திரம் பழிசெய்த குலைதீரயனுமன்முன்னாள், நடையோட்டமாய்க்குணர்ந்துவந்தநா ளில் நாதாக்களெடுத்துவைத்தாருண்டாய்ப்போச்சு, அடையாள ஞ்சொன்னாலுந்தெரியாதப்பா அதிலிருந்தயேகசஞ்சீவிமூலி, வி டையெறினார்சடையில்மதியைவைத்தார் விமலனானெனக்குனாத்தா ரானதாலே. (௱௫௭)

பிணிமயக்கிமூலிமகத்துவம்.

ஆனதால்பிணிமயக்கி மூலிவேகம் அண்டரண்டந்தாண்டம ணிச்சூட்டுஞ்சாத்தில், ஆனதால்நவலோகமுருகும்போது அலமுக த்தில்துருச்சாறுவார்ப்பீராகில், ஆனதாலாயிரத்தெட்டாகுமாத்து அளவறந்தசரக்கெல்லாஞ்சுண்ணமாச்சு, ஆனதால்க்கட்டாச்சுமெ ழுகுமாச்சு ஆதித்தன்போற்செந்தூரமாகும்பாரே. (௱௫௮)

ஆகுமடாகல்த்தாமரையில்தங்கம் அத்தருமூலியிலே செம்பு தங்கம், சாகுமேவோரிதழில்தாம்பிரந்தங்கம் சதாவேறிலைச்சாற் றிற்காசிதங்கம், வாருமேவிருலியிலேலோகந்தங்கம் மணிப்பறித்

துத்தீயிலேயிருப்புதங்கம், கூறுமேயேகமூலியிலேதானும் கோடிதங்கங்காணுமேகோடிப்பாரே. (௱௫௯)

கோடிநீருடைமூலிகையின்பொற்கை கூறுவோமந்திதோறந்தோத்திரமூலி, நீடியேயாடைபோல்படர்ந்திருக்கும் நீலவர்ணமாய்ப்பூர்க்குமிலையோவில்லை, தேடியேகொடிமத்தும்பூத்திருந்து சிவந்தவர்ணமைபாசிபோல்கிடக்குமப்பா, ஆடியேயவரிவகைக்குருத்துப்பாரு அதினிலேமிலையாகுமந்தம்பாரே. (௱௬௰)

அந்தமென்னகைதனிலேபிடுங்கும்போதும் அதுசுனையேபசபசென்றுகையோபுண்ணாய், விந்தம்பாரோரண்டயெண்ணெய்பூசி விரிவானமூலிகொண்டுவிந்துநீயும், சொந்தமப்பாநிழலுலர்த்தித் தூளாய்ப்பண்ணி தூளுடனேகெவுரிகெந்தி தாரமூன்றும், தொந்தம்பார் புங்கெண்ணெய்விட்டுஆட்டி சூரியனில்வில்லையாயுணர்த்திடுவே. (௱௬௧)

வில்லைதனைக்காய்ந்தபின்புகலசத்துள்ளே விரவாகவைத்ததிலேகுழித்தயிலம்வாங்கி, தொல்லையென்னயிறங்கையிலேசூரியபூசைசொர்னவயிரவன்பூசைபண்ணிவாங்கி, கல்வதிலேதடவிவிடுதங்கமாச்சு கர்த்தர்மேலாணையுண்டுகண்டுபாரு, கொல்லையிலேயிருக்குதடாநதிகள்தோறும் கோடிநீருடையிலேகூர்ந்துபாரே. ()

கோரக்கர்மூலிமகத்துவம்.

கூர்ந்துபார்தசமூலியிலைவேற்பாரு குவலயத்தில்கோரக்கர்மூலிபோலே, ஊர்ந்துபார்சித்தர்களைக்கொண்டுவாங்கி யுலகங்களுருகையிலேபிழிந்துவாநீ, ஆர்ந்துபார்தசமாத்துக் காணும்பாரு-ஆவாயிலைபொன்னாவாயடையாளத்தை, நேர்ந்துபாரிலைபொன்போலிருக்கும்பாரு நெடுங்கொடியமிலையகலமுள்ளங்கையே)

கையானநதிதனிலேயாளிரங்கா கசம்பார்த்துமுளைக்குமடா சித்தர்மூலி, மையானத்துப்பொட்டுந் தீயைப்பார்த்தால் வகைமூலிதோன்றுமடா வோடமேரி, பையானபொன்னுரை பிடுங்கிவந்து பதத்தில்சேர்ரசம்விடகட்டிப்போச்சு, மெய்யானநவலோகந்தடவிப்போட வேதித்துவேதையடாமெய்யாந்தானே. (௱௬௪)

வேதையடாபொன்னுகத்தாணிமூலி மெத்தவடாகொல்லிக்குமேற்கேயெல்லாம், பாதையடாமுளைத்திருக்குமாள்நடமாட்டம் பர்ச்சிதமேகிடையாது அடையாளம்பாரு, தூதனைப்போல் படர்ந்திருக்குமிலைவெற்றிலைப்போல் தோணுமடாபடம்விரியுஞ்சூரியனைப்போல், காதசைக்குமிலைவேர்பூக்காய்சமூலங் கண்டவனைகொண்டருவான்விபரஞ்சொன்னேன். (௱௬௫)

விபரமென்னவொவ்வொன்றில்கவர்கள்கோடி விரைதின்றால் சாவில்லைவேதைவேதை, விபரமென்னவொருதுளிச்சாற்பத்துமா த்து விட்டிடவேநவலோகமெல்லாமாச்சு, விபரமென்னவிழிமே ல்லாவேரைக்கண்டால் வெருண்டோடுங்கெந்திரத்துக்கப்பால்தா னே, விபரமென்னவிந்துகட்டும்பூத்தின்றுக்கால் விண்ணுணம்ரொ ம்பவடாமூலிபாரே. (௬௬)

புண்ணாக்கிசர்மூலிமகத்துவவேதை.

பாரப்பாபுண்ணாக்கர்மூலிவேரை பகருவேன்நன்றாகக்கே ளுகேளு, ஆரப்பாமூலிகண்டுபிடுங்கப்போறார் அதிகமாம்வாதவி த்தையாடப்போறார், நீரப்பாயிருந்திடத்தில் நாடாதப்பா நிலை யானகல்லாம்பார்தனிலேநிற்கும், சேரப்பாசிறுதும்பை செடி யைப்போலே சிவந்திருக்குமிலைமிளகுசெடியைப்பாரே. (௬௭)

செடியைப்பார்காய்மிளகுதன்னைப்போலே சிறுவுமிபோல்பூ வடாபாருபாரு, அடியப்பாதலைவரைக்குமிலையிலைதுளிர் அஞ்சாறு யிலைநுனியிலிருக்கும்பாரு, முடியப்பாகறுக்காது வெயிற்பட்டா லு-மூர்க்கமாங்காத்தாட்டமாறுவுந்தான், துடியப்பாதழைத்திரு க்குஞ்சோதிபோலே சுருளாதுயிலைகாய்பூவேருதானே. (௬௮)

வேருமேயாணிவேராருமல்வாங்கி விதமூலிசமூலமதுகசக்கி த்துள்ளி, வாருமேநவலோகந்தங்கமாச்சு மாத்துக்குயாணியில்லை யிவடமீது, சேருமேரொம்பவுண்டுசித்தற்கெய்தும் சின்னமனுட ர்க்கிதுதான்தேடவேண்டும், பாருமேமூலிகண்ட போதேபாவும் பறக்குமேயாகாசமார்க்கந்தானே. (௬௯)

சிவன்மந்திரம் சாபநிவர்த்தி.

மார்க்கமென்னயெவ்வண்ணமாகுமூலி வளர்பொதிகைசதுர கிரிரொண்டிலுண்டு, ஏற்கவேநவகோடிசித்தர்சாப மிட்டுவைத்தா ர்மூலிக்கியிடறதாக, பாற்குமுன்னேசிவனைநான் பணிந்துபோ ற்றிப் பரிசித்தேனெவ்வண்ண மூலிசாபந், தீர்க்கவேபரமனுட மந்திரங்கேளு சிவயவசிநசிமசியென்றுசேவி. (௭௰)

சேவிக்கத்தீர்ந்துபோமூலிவாங்கி தேசத்திற்பொடியாக்கி வைத்துக்கொண்டு, ஆவிக்கசரக்கதிலேகட்டுமாற்கம் அவரவரே பாடிவைத்தசெய்பாகத்தில், தாவிக்கவுந்தந்தபாகங்கட்டுந் துய்ய பற்பஞ்செந்தூரஞ்சுண்ணமெல்லாம், பாவிக்கும்பிரபலிக்குமப் பாசொன்னேன் பாரிதுள்ளவாதமதுபகருவேனே. (௭௧)

செந்தகரைவேதைசாபநிவர்த்தி.

பகருவேநவலோகமுருகும்போது பருக்கைப்போல்பொ டியெடுத்துவாயிலிட்டு, நகருமேதகையிலேகக்கிக்கொண்டு நூற்

றுக்குவொருதுளியேபிழிந்துபாரு, புகருடனேதாம்பூரம்பொன்
னும்பாரு பூட்டடாதிறந்துவிட்டேனெவ்வர்னம்பார், தகனாயே
செந்தகனாகண்டால்தானேசகலசித்தும்வாதமடாதரணியோற்கே.

தரணியிலேசெந்தகனாகிடையாவிட்டால் சதுரகிரிமலையோ
ரம்ரொம்பவுண்டு, பரணியிலேபொங்கலிட்டுமூலிகைக்குப் பால்
பழந்தேங்காயுந்தீபதூபம், திரணியேகுளிர்ச்சியேபூசைசெய்து
செஞ்சாவல்பெலியிட்டுப்பிடுங்கிவந்து, கிரணமென்றால்மெத்தந
ன்றுயில்லாவிட்டால்கிடைத்தபோதமைத்தபடிகிடைக்கும்வாங்கே

வாங்கியேசெந்தகனாசமூலமையோல் மைந்தனேயறைப்ப
தற்குவயணங்கேளு, தாங்கியேதிரியாதேசுட்டுநீயும் சுக்குலர்த்தி
ச்சுரோணிதம்விட்டாட்டிமையை, வாங்கியேசிமிழிலேயடைத்து
க்கொண்டு வகையுடனேதாம்புலத்தில்தடவிப்போட, எங்கியேதி
ரியாதேபத்துமாத்து என்னசொல்வேனிந்தவழி யியல்புதானே.()

சூதமணிவித்தை.

இயல்பானபொற்பாவமரத்தைக்கண்டால் இரக்கிவிடுபாலத
னைமெழுகுபோலே, வயம்பானபத்திரமாய்வைத்தாய்நீயும் மண்
டலத்திற்கடுகளவுவாதப்போக்கு, சுயம்பாகநவலோக முருகும்
போது கூட்டிடவேவேதையதுபழுக்கும்வேதை, அயமானசெ
ய்தியிதுவாதத்திற்கு ஆடுமேசூதமணியாடுந்தானே. (௱௭௫)

ஆடுமேசெந்தகனாவித்தையெல்லாம் அளந்துகொண்டுபா
ண்டத்திற்குழித்தயிலம், நாடுமேபுணரியிலே தாவிப்பாரு நமக்
காகுமுமக்காமோதகனாயல்லோ, கூடுமேகுஷ்டமெங்கே குனா
நோயெங்கே கோடானகோடிபிணித்தீரும்பாரு, நாடுமேவிசன
டியானாக்கூடி நடத்துமேரசவாதங்கண்டுதேறே. (௱௭௬)

கண்டுதேர்வாதமெல்லாங்காருகாரு கற்பித்தவனல்லோகா
ற்கவேண்டும், உண்டுபாரன்னீளம்விட்டுப்பாரு உத்துப்பார்வாதம்
வருமோமோபேரோ, தொண்டுதான்புரியடவாய்சகலசித்தும் துரியத்
தில்சித்திகளானவாறு, மிண்டுபார்செய்யாதே தோஷந்தோஷம்
வேதாந்திமீண்டுசெப்புகண்டிலேனே. (௱௭௭)

கருந்துளசிவேதை.

கண்டதிலேகருந்துளசிசொல்லக்கேளு கணுக்கணுவாய்ப்பூ
பூர்க்குந்தெய்வீகம்போக, மண்டலத்தில்நில்லாது திருப்பதிக்கு
வடக்குமலையருகோரங் கிடைக்கும்பாரு, தொண்டர்களேயதுதி
ன்றால்குஷ்டமேது சூலையென்றபுண்ணேதுபிணிகளேது, அண்
டமுட்டுச்சாறுவிட்டு ரசங்களஞ்சி யதிலிட்டுரவியிலிடு மணியாட்
டென்ன. (௱௭௮)

ஆட்டென்னயெல்லையனாத்துகுகைபோல்பண்ணி அதிலிட்டு கெந்திதனைப் புடத்தில்வைத்து, போட்டுடனேகெந்திகட்டப்பா ஷாணத்தைப் பூட்டிப்பாரிப்படியேயதுவுங்கட்டும், தேட்டென் னசாதிலிங்கமதுவுங்கட்டும் சிகத்திலரிதாரமதுகட்டிப்போச்சு, நா ட்டுடனேநாபியதுகட்டிப்போச்சு நவாச்சாரம்பொரிகாரங்கட்டி ப்போச்சே. (௱௭௯)

போச்சடாபூரமதுகல்லுகல்லு புலத்தியனேசவ்வீரங்கட்டும் பாரு, எச்சடாபோடுமடாசரக்கையெல்லாம் என்னசொல்வேன் கருந்துளசிக்குடோரியப்பா, பாச்சடாகட்டினத்தைமெழுகுமா கப் பழுக்குமுன்னேயிச்சாற்றி லுருக்குநீதா, நீச்சடாநிலையாது மெழுகுமாச்சு நிசமாகச்செந்தூரமாகும்பாரே. (௱௮௰)

வங்கசெந்தூரம்.

செந்தூரமாகவேகட்டினத்தை திறமாகமுலைப்பாலிற்சுருக்கி ட்டேநீ, வந்திருந்துதுளசிவேர்க்கொண்டுவந்து மைந்தனேசாரீ யஞ்சல்லிபோட்டு, விந்தூரும்நாகமதுவிட்டுநீயும் விரவியேகி ண்டையிலேயிரவிபோலச், செந்தூரமாகுமந்தச் சரக்குமப்பா செகசோதிகொடுத்துப்பார்முகத்தில்தானே. (௱௮௧)

முகத்திலேமுன்மெழுகுகொடுத்துப்பாரு முப்பதுமாத்தா ச்சுசெந்தூரந்தான், இகத்திலேயறுபது மாற்றுமாச்சு இதுமுன் னேகடினமோவிருபதப்பா, அகத்திலேயிருந்துகொண்டுவாய்வீ ண்பேசும் அறுதலிக்குவாய்க்குமோவாண்பிள்ளைக்கு, சுகத்திலே பலிக்குமப்பாவாதந்தானும்சூட்டிப்பார்கருந்துளசிசூக்ஷம்பாரே,

பொற்றுளசிவேதைமார்க்கம்.

சூக்ஷமாம்பொற்றுளசிசொல்லக்கேளு தூரெல்லாந்தங்கம டாசோதிப்பாரு, சூக்ஷமாம்பொற்றுளசித்தன்னைக்கண்டால் தோ த்திரத்துக்கிடந்தபொருளென்றுநீயும், சூக்ஷமாய்க்கொண்டுவந்து தில்லைசூக்ஷம் சொரியடாநவலோகத் தாற்குசூக்ஷம், சூக்ஷமாய் பொன்னூறுமாற்றுமாச்சு சூட்டவேபொற்றுளசி சூதங்கட்டும்.()

கட்டுமேமுன்சொன்னதெல்லாங்கட்டும் கடையிலுள்ளசரக் கெல்லாங்கட்டுங்கட்டும், வெட்டுமேநீங்கிவிடுமிந்தவேறு வெள்ளி யிலேகுளிசமிட்டுசென்னிமீது, கட்டுமேபூதகணங்காணுதோடுங்க ருந்துளசிகுளிசமிடக்கெற்பமாமே, விட்டுமேநீங்குமடாபில்லியெ ல்லாம் விஷமில்லைச்சூனியமுமில்லைதானே. (௱௮௪)

இல்லையேபொற்றுளசிக்கருந்துளசி இகத்திலேகிடையாது பாருபாரு, சுள்ளையென்றும்பேரிதற்குசிங்கப்பெருமான் கூப்பி ட்டால்விஷத்தீருங்கூறுகூறு, தொல்லையெல்லாந்தூருவிட்டோடி

ப்போகும் தோஷபிணிநசியமிடவோடும்பாரு, தில்லையில்நடன
மிடுமாம்தவல்ருள் செப்பினாரப்படியேசெப்பினேனே. (௱௮௫)

பொன்னூமத்தைவேதை.

செப்பவேசித்தர்படிமூலிவித்து தினமூலிதேசத்தில்மலையி
லுண்டு, தப்பவேசொல்லவில்லைபொன்னூமத்து தாடகைமாம
லையிலுண்டுசார்ந்துபாரு, கப்புவிடாதொருமித்தேகண்டுபோலே
கைமுழத்துக்கிரண்டுமுழம்வளருமப்பா, விப்புவிடவிரகாதுதங்
கம்போலே மேதினிலும்பூவில்லைக் காய்வர்னங்காணே. (௱௮௬)

காணவேகாய்மிளகுதண்டியப்பா கனமூலிபூவுமேவேப்பம்
பூப்போல், தோணவேவாசமென்னமத்தம்போலே சூடுமடாமு
கந்துகொண்டால்கோட்டியாவார், பேணவேவாசமதுநாகிபூடு பி
டியாமல்பேர்சொலாதவனைவைத்து பூணியேமூலமதுவண்டுமூலி
பிடுங்கிவந்துஆளிலாதிடத்தில்தூக்கே. (௱௮௭)

ஆக்கியேயுலர்ந்தபின்புபூவேருக தூர்வேறுயில்லைவேறு காய்
தான்வேறு, ஆக்கியேபத்திரமாய்வைத்துக்கொண்டு அந்தயிலைகோ
ரக்கர்மூலியோடே, போய்க்குடிக்கத்தீயினிலே செம்புக்காச்சு
பூட்டுவாய்வயசுபனிரெண்டுமாச்சு நோக்கியேநொடிக்குமுன்னே
பழுத்துப்போச்சு, நூதனமாய்ப்புகையதனை பகரவேண்டாம்.)

பகரவேகற்பாகிநெடுக்ககொண்டு பகர்ந்தவனேபொன்னூ
மத்தின்வகையைக்கொள்ளு, பகரவேபின்னொருவர்கொண்டாலுந்
தான் பயித்தியங்கொண்டலைவார்கள்தீராதப்பா, உகரவேபுகையி
லுள்ளவேதைகண்டா லுடையவனேநீபொழிய வொப்பாருண்
டோ, அகரவேத்தின்மைக்குப்பூச்சுட்டுப்போடு அஞ்சனமேகார
மைக்கொழுப்பிலப்பா. (௱௮௯)

கொழுப்பிலேவிளையுமாபுதையில்காணும் கூத்தனில்லைவினை
யில்லைபிசாசோவில்லை, வழிப்பிலாநடவாதேஆமைஊளமை மா
ருட்டம்தெரியாமல்வேறேதேடி, முழுப்பிலேவிட்டிடுவார் சித்த
ரெல்லாம் முன்னதென்றுசொல்லார்கள்தண்டகத்தை, ஒழித்தல்
லோபோட்டமடாமெய்ஞ்ஞானிக்கு மொழியிதுகருத்தோடுமூல
கினூடே. (௱௯௰)

ஞானிகள்பற்றற்றல்.

ஊடென்னபூரணத்தில்கொண்டுபாரு ஊமத்தினுட்காயை
அணுப்போலப்பா, வீடென்னகூடல்லோபிலத்துப்போச்சு வே
தாந்தஞ்சித்தாந்த மிரண்டுமாச்சு, காடென்னசெடியென்னமலை
தானென்ன கல்லென்னகறடென்னகானலென்ன, பாடென்னகா
ய்தின்றயோகிக்குத்தான் பதியென்னவிதியென்னபண்டுதானே.()

பொன்னூமத்தைமணிமந்திரம்.

பண்டிதனேவாதியேபொன்னூமத்தை பரிக்கிறவனெவனெவனோபரிக்கப்போமுர், கண்டுடனேசம்பவிப்பான் யோகியப்பா காம் போடுவரமுதலாய்நறுக்கிக்கொண்டு, உண்டுபண்ணும்குளி சமடாவசியமாச்சு உன்னுணைஓம்ஆம்மென்றேதிக்கட்டு, தொண்டுபண்ணும்பெயர்களுக்குகட்டுகட்டு தோஷமிடும்பாவம்விடுமெல்லாம்போமே, (௱௮௨)

எல்லாம்போம்பாவம்வருமின்னதென்று யிறப்போதுவப்பொழுதுவலங்காரங்கள், சொல்லுவான்பார்நினைத்ததெல்லாஞ்சித்தர் சூடும்பார்பிரசண்ட வித்துவானும், கொல்லாண்டுவழிந்தாலுமழிப்பானப்பா கோள்பிரமாநாட்டையுங் கொள்கைமெய்க்கும், பல்லாண்டுவிசையமகள்சரசோதிப்பெண் பாலிப்பாலவருக்குவாகினியுமாமே. (௱௯௩)

சிரியாநங்கைமூலிவிபரம்.

வாகுடனேவன்னமொருதிருநாள்மூலி வருவிக்குந்தொழில்முறையில்வாதங்கேளு, காகுவனமூலியென்றுஞ்சிரியநங்கை கருதுவார்மூலியல்லோ வேர்தாநாமம், ஆகுமோபொன்னூரிமூலியப்பா அதுவுமேசிறுசெடியாய்ச்சாணுமாகும், வேகமேதோச்சுவடிவைத்தாற்போலே விதவிதமாயிடைபெருத்து அடிசிறுத்தே.()

சிறுத்திருக்குமிடைக்குமேல்முக்கோணம்போல் சிவந்திருக்குமிலையெல்லாம்பூவின்வண்ணம், குறித்திருக்குஞ்செங்கீரைத் தண்டுபோலே கொண்டிருக்குங்காய்மிளகுதண்டியப்பா, பொறுத்திருக்குமருமொன்றியிலையைப்போல பூர்த்திருக்குஞ்செடிமுழுதும்பூவுங்காயும், உறுத்திருக்கும்பொன்னூதிநெருப்புமூலி உன்னுணையிலையமுத்திப்புண்ணூப்பாரே. (௱௯௫)

புண்ணூக்குமூலிமந்திரம் பாஷாணவேதை.

புண்ணூக்குமேனிக்குக்காப்புக்கட்டி பொங்கலிட்டுதினையரிசிமாவுமிட்டு, கண்ணூனசூரியகிராணத்தில்தானும் கன்மிசங்களில்லாமல்பிறந்தகோலம், பெண்ணூனுமொன்றுகப்பிடிங்கிவந்து பேசாதேதங்கமதில்குளிசம்வேறும், பண்ணூனயிலையரைத்துக்குகைபோற்பண்ணி பாஷாணக்கட்டிவைத்துச்சிலைசெய்யே. (௱௯௬)

சிலையேழுசிலைமண்ணுஞ்செய்வாயப்பா சிறுபுடத்திற்கட்டுமடாதிண்ணந்திண்ணம், வாலையடாயெனக்குனாத்தாள்தன்தயவாலே வந்துதடாபொல்லாங்குபின்வேறில்லை, நாலையடாவிட்டுவிட்டார்மூலநாடி நாழியிலேபறந்துவிட்டார்மூலையோனி, கேலியடாமுக்கோணமூலைவாசல்கிட்டாதுமவுனிகட்குயிழைக்கத்தானே.

பிழைக்கத்தான்வாதமடாபாஷாணக்கட்டை புகன்றிட்டேன் யிம்மூலியுலகில்மெத்த, விழைக்கத்தானிதுமறவோ தெரியாதோ சொல் வேலையற்றவாதிமகனிவன்றான்பிள்ளாய், அழைக்கத்தான் தாயோடிவந்துசொன்னாள் ஆயிரத்தியறுநூறுவாதஜாலம், தழைத் தட்டால்விட்டுவிட்டாலொன்றுமில்லை தழலானரசவாதந்தாண்டிப்பாரே. (௱௯௮)

சத்திச்சாரணைவகாரவேதை.

தாண்டவேசத்திபதிசொல்லக்கேளு தருவானமாவடுப்போ லுழக்குவாங்கி, மூண்டவேகருங்கழுதைப்பாலுழக்கு முனைப்பானசெங்கோட்டைத்தயிலங்கால்தான், பூண்டதோர்கொடிக்கள்ளிப் பாலுழக்கு புகழானகெவுரியதுபலந்தானாலும், வேண்டியேபொடித்திட்டுவழலைநஞ்சு விதமானதோன்றிட்டுகஸ்தூரிமஞ்சள். ()

மஞ்சளொடுகருணைத்தூள்நாழிசேர்த்து மைந்தனேவெயிலுலர்த்திப்பொடித்துவைத்து, துஞ்சவேசசவேதிச்சொல்லிவிட்டேன் தொகுத்துப்பாரிதிலேநீமாட்டிப்பாரு, கொஞ்சவேசரக்கெல்லாம்பேதியாகும் கிளியூரல்நன்னாரிசிறுகோமட்டி, இஞ்சிப்பூகத்தாழம்பூவேயேலம் இலவங்கமித்தனையும்மேத்திப்பாரே. (௨௱)

ஏத்தியேஅனுபானஞ்சரக்குக்கெல்லாம் இந்தமருந்தேயுலர்த்தியிடித்துத்தூளாய், மாத்தவேமுன்பேதிகாட்டுமூலி வனப்பச்சிலைகளெதுக்கானாலும், கூற்றனேருஞ்சாறுவார்த் தழைகளெல்லாம் கூட்டிடுவாயனுபானவகையைக்கேளு, சாத்தவேஅனுபானதூள்தான்கொண்டு தருவானபணம்போலவைத்துக்கொண்டு. ()

வைத்துபணம்போலளவுதூளிலேநீ மைந்தனேயனுவளவு சாத்தப்பேதி, ஒத்தவன்பச்சிலைக்குக்கொடுத்துச்சாறு ஊத்தூருங் கசக்கியேயிடிக்கும்போது, வெத்தியுடன்பேதியிட்டுவாங்குசாறு வேதையென்றவாதத்துக்காகுமல்லால், உத்தமனேவயித்தியத்துக்காகாதப்பாஉள்ளபடிசொல்லிவிட்டேனுனக்குத்தானே. (௨௱௨)

பாஷாணக்கட்டு நாகக்கட்டு.

உனக்குத்தானின்னமொருவகையைக்கேளு உதலிலைமிகவிடித்துச்சாறுவாங்க, தனக்குத்தான்சொன்னபடிபேதியிட்டுச் சாற்பிழிந்துப்பாஷாணஞ்சுருக்குத்தாக்க, கனக்கத்தான்கட்டாச்சுசுத்தநாகம் கட்டுமடாவுதவியென்பாராடையொட்டி, எனக்குத்தாநிந்தவகைபாடமப்பா என்னுகங்கட்டினாலேதுபாரே. (௨௱௩)

சகலசரக்குங்கட்ட ஏகமூலிகை.

ஏதுப்பார்கட்டுக்கொடியிலையின்சாறு இதுபோலேசாற்வாங் கிக்கொண்டுநீயும், பாதிப்பார்கெந்திகட்டுந்தாரங்கட்டும் பாஷா

ணம்வொன்பதுமேகட்டும்பாரு, தேத்தும்பார்சாதிலிங்கம்விரங்கட்டும் துடியானநவச்சாரங்கட்டுங்கட்டும், தாதுபோற்பொரிகாரந்தன்னைக்கட்டும் சவுக்காரங்கட்டுமடாபேதியாலே. (௨௱௪)

துருசிவேதைமார்க்கம் சுன்னப்போக்கு.

பேதியென்னகத்தாழம்பாலைவாங்கி பேதியிடசுத்தசெலங்கசவாதப்பா, வாதியென்னகற்பூரமாட்டிப்பாரு வாசமென்னதெய்வீகவாசம்வீசும், சோதினைக்குப்பூரத்தைப்பற்பம்பண்ணிதுரிசியிலேவானீரால்பூசிவாங்கு, ஆதியடாரவிமுகமேபோடுபோடுஅப்பனேவெள்ளையெனக்கூகைநீறே. (௨௱௫)

நீருசைவாசலத்திற்பூசிப்பாருநிமிளையிலேபொன்னிமிளைநீறுநீறு, மீருதேயிருப்புத்தொட்டிசெப்புத்தொட்டி மிகத்தானநீறுமடாபூரநீற்றால், வாறுனயப்புரகம்வெள்ளையாச்சு மடையனேநீறுமடாமனேசிலைக்கும்,பேருகவிப்படியோவெயிலில்வைக்கப்பேணியேநீறுமடாகாணுவாயே. (௨௱௬)

காணவேமலம்பார்த்துக்காசைவைத்துக் கருகியேயறுபதுகடிகைக்கப்பா, பூணவேயதையெடுத்துப்புளியில்சுற்றிபொன்போலேகழுவிவிட்டுப்பின்னுங்கேளு, பேணவேநாற்பதுநாளெடுத்துவைத்துப் பிறகுபார்மண்டலத்திற்செம்புசுத்தி, நாணவேபூரமிட்டுக்கெசப்புடத்தில் நாட்டிப்பார்தாம்பூரம்நீறிப்போச்சே. ()

தாம்பரபஸ்பம்.

போச்சென்றதாம்பரத்தைநவலோகத்திற் பூட்டிப்பார்பொன்னுச்சுகுமரிவேகம், மாச்சென்றமலசாரப்புளிப்புத்தானேமகத்தானசெம்பூரல்வாங்குமப்பா, காச்சென்றதண்ணீரா யிருப்புச்சட்டி கண்டபடிமுட்டவிட்டுக்குமரிப்பாலை, ஆச்சென்றசிலம்வற்றிநாழியானால் அதிலுழக்குப்பாலூற்றிசுத்திசெய்யே. (௨௱௮)

சுத்திசெய்தப்பால்விட்டுவைத்தபோது சிறந்தலிங்கபர்பந்தாம்பூரபற்பம், பத்தோடுசத்தபேதியையும்போடு பாங்கானதாம்பூரமென்னசொல்வேன், எத்திசையுமிருக்குமடா செங்கல்மீதுஎடுத்துவிடுகுருதொட்டுகுழம்புதன்னை, முத்திலுமேகுழம்பத்திற்செம்புக்கட்டி முக்கியமடாதாம்பூரங்கண்டுகொள்ளே. (௨௱௯)

கருந்துத்திமூலிகைவேதைமார்க்கம்.

கொள்ளாதேகருந்துத்திச்சாறுவாங்கி, கூறுவேன்பேதியிட்டுவிடிக்கும்போது, வெள்ளாறுயோடுமடாசாறுதன்னில் வெள்ளீயமுருக்கியங்கே சாய்க்கச்சுத்தி, உள்ளாதேபித்தளையுஞ்சுத்தியா

ச்சு உரைத்துவிட்டேன்காரியஞ்சுத்தியாச்சு, அள்ளாதேதாம்பரமுஞ்சுத்தியாச்சு அபஞ்சுத்திவெங்கலமுஞ்சுத்திதானே. (உ௱ய)

சுத்திசெய்தநவலோகமிதிலேசுற்றி சுற்றிநாகங்களெல்லாமிதிலேசுற்றி, பத்திசெய்ததிராவுருகுமிதிலேசுற்றிப்பாச்சடாமெழுகாச்சுவைத்தாற்போலே, முத்திபெறுசரக்குவைலோகத்தாலே மூணமடங்குஞ்சுற்றிகண்டபோததானே, நித்தியநும்நந்திகுரு பூசைசெய்து நினவுடனேவடுகனையும்பூசைசெய்யே. (உ௱யக)

பூசைவிதிமார்க்கம்.

பூசையடாகணேசனுக்கும்பூசைசெய்வாய் புகழ்பெரியசுப்பிரமணியம்பூசைசெய்வாய், ஆசையுடன்நவசித்தர்பூசைசெய்வாய்-அம்பலவர்பூசைசெய்வாய்மேருபூசை, வாசமுடன் சுகந்தபுஷ்பமாலைச்சாற்றி வயிரவற்குவடமாலைபூசைசெய்து, போசனமும்பலகாரமதுமாங்கிஷம் பூரணிக்கும்பூசைசெய்துபூட்டுவாயே. ()

பூட்டுவாய்மாதளம்பூசெந்தாழம்பூ புனமுருக்கன்பூவுடனே செவ்வாலிப்பூ, கூட்டுவாய்செண்பகப்பூதாமரைப்பூ குமரிப்பூவடமாப்பூகொன்றைப்பூவும், நீட்டுவாய்செவ்வந்திசெங்கழலிப்பூ நீலோற்பனம்பூவுடனே நிலவாகைப்பூ, காட்டுவாயாவாரம்பூசரக்கொண்ணைப்பூ கருங்காலிப்பூவுடனேகாக்கணத்தின்பூவே. (உ௱யரு)

பூத்தயிலம் அறுபத்துநாலுசரக்குகள் சுத்திமுறை.

பூவானபதினாறுபூவுங்கேளு புகழாகவகைக்குவகைபலம்பத்தப்பா, வாகானவிதையிடித்துத் தூளாய்ச்செய்து வகையின்மேல்பலம்பத்துமதித்துவாங்கி, தேவானநூற்றறுபதுபலத்தூளோடே செப்புவேன்பேதியதுகலந்துகொண்டு, வாகானபாண்டத்திலிட்டுநீயும் வருகாமல்குழித்தயிலம்வாங்குவாயே. (உ௱யசு)

வாங்குவாய்தயிலமதுசெங்கொட்டைநஞ்சு மைந்தனேநாழிகண்டாற்பலமேவொன்று, தீங்கொன்றும்வாராதுதயிலப்போக்கு செம்புசுற்றிலிங்கசுற்றிநிராவுஞ்சுற்றி, பாங்கிலேநவலோகஞ்சுற்றியப்பா பாவகமாம்பாஷாணமெல்லாஞ்சுற்றி, சாங்கமடாயறுபத்துநாலுஞ்சுற்றி சண்ணுமடாதயிலத்திற்சுத்தியாமே. (உ௱யஎ)

சுத்தியிதுசொல்லிவிட்டேன்தயிலப்பூக்கள் சோலிசத்துமில்லையடாதூரயில்லை, பத்தியென்றவாதமதுபலிப்பதாகும் பழுதில்லாப்பூத்தயிலஞ்சரக்குக்கெல்லாம், சித்திபெறும்வழியாகும்நீட்டுமுன்னே சீச்கிரத்தில்பேதிக்குந்தூரியமப்பா, அத்திவுரித்தோணுமாத்ததயிலப்போக்கு ஆடிப்பாரஷ்டசித்தியாகுந்தானே. ()

சாத்திரபேதி வேதைமார்க்கம்.

ஆகுமேசகத்திரபேதிகேளு அப்பனேதில்லைப்பால்பதக்கு
வேண்டி, போகுமேதருநாய்பெண்டித்துப்போட்டு புகழாகரவி
யில்வைக்கமீனமாகும், சாகுமேபேதியென்னசொல்லப்போறே
ன்-சகத்திரப்பேதியடாசரக்குக்கெல்லாம், வேகுமாயிருக்குமடா
லயம்பேதிக்கு மின்மினியும்நாழியிட்டுவேதிப்பாயே. (௨௱௰௭)

வேதிக்கசகத்திரபேதிகொண்டுவெள்ளி செம்புருகையிலேபே
திப்போடு, ஆதிக்கவெள்ளிசெம்பாஞ் செம்புவெள்ளி அப்பனே
பேதித்தவெள்ளிசெம்பே, நீதிக்குகுருவாகவைத்துக்கொண்டு நின
வாகவெள்ளிக்குவெள்ளிபோடு, சாதிக்கதங்கமடாதாம்பூரத்தில் தா
ம்பூரநீட்டவேதங்கமாச்சே. (௨௱௰௮)

சாத்திரபேதிக்களங்குமார்க்கம்.

தங்கமடாசகஸ்திரபேதியாட்டு தனித்தனியேகெந்தியொன்
றுசூதமொன்று, தங்கமடாபலம்பத்துக்கெந்தியென்ன தருகாம
ற்சூதமோபலம்பத்தப்பா, தங்கமடாசூதமதுவிலக்குவேறே தா
ளியிடுகெந்தியொருபாண்டத்துள்ளே,தங்கமடாவேதையிட்டுக்கெ
ந்திக்குத்தான் தைவளையுஞ்சாறுடனேமேனிச்சாறே. (௨௱௰௯)

மேனிச்சாற்வேளைச்சாற்சூதங்கெந்தி விலறிவைத்தபாண்டத்
துள்நிரம்பவிட்டு, தீனிச்சாற்வியவோருபுடமாய்வெந்த திருவான
கெந்திரசம்வேறேவாங்கி, தானிச்சாற்பத்தியமாய்க்·குழிக்கல்லுக்
குள் தனித்துவிடுசூதமதுசெந்தூரிக்க, காணிச்சாற்பேதியிட்டுப்
பத்துசாமம்கணக்குடனேயரைத்துவரப்பவழம்போலாம்.(௨௨௰)

பவழம்போல்செந்தூரமானபின்பு படுபாதிகாறிகெந்திக்கு
ழிக்கல்லிட்டு, பவழம்போலரைக்கையிலே பேதிப்போடு பருதி
யொளிவீசுமடாசெந்தூரந்தான், பவழம்போலிருவரையும்வைத்
துக்கொண்டுபடபடப்பாசெய்யாமற்சிவனுஞ்சத்தி, பவழம்போ
லானவரைநவலோகத்தில் பாச்சடாயிருவரையும்பத்துமாத்தே.()

மாத்துவதுகளஞ்சியதுநூறுக்குத்தான் மாவிடவேபோதும
டாசிவனுஞ்சத்தி, தோத்துவதுசைவீரம்நூறுதாக்கி துடியாகப்
பேயத்திப்பாலாலூட்டி, சாத்துவதுரவிவில்லையாகத்தட்டி தானு
லர்த்திபத்திரமாய்வைத்துக்கொண்டு, மாத்துவதுமுழப்புடத்திற்
செந்தூரிக்க வாரியிடுபில்லைதனைக்கலசத்துள்ளே. (௨௨௨)

கலசத்திலிட்டுமேமேலேமூடிக்கனமாகசீலைசெய்துபுடத்திற்
போடு, உலசத்துசெந்தூர மாகும்பாரு ஓகோகோசெந்தூரத்
தோடேநீதான், பலசத்துரசகெந்திசெந்தூரம்போடு பருதிநிர

மாகுமடாவீரந்தானும், குலசத்தமூன்றுவகை செந்தூரத்தைக் கூட்டியனையொன்றாகக்கூறினேனே. (௨௨௩)

வீரரசகெந்திவேதை.

கூறினேன்வீரரசகெந்தியாலே கோடானகோடிவித்தையா டலாம்பார், தேறிநீகொண்டிடவேசரக்கையெல்லாம் செந்தூரஞ் செயிக்குமடாமற்றப்போக்கு, ஆறினதோர்பாசமடாவப்பாசொ ன்னேன் ஆதியந்தமொன்றுடனேமூவராச்சு, வீறினதேயிறுதே வீர்தேவன்தேவன் வெகுசுருக்குலோகம்பேதிக்கும்பாரே.(௨௨௪)

பேதிக்கும்வெள்ளியொன்றுதாம்பரமொன்று போனகெந் தியொன்றுபொன்னேவொன்று, நீதிக்கச்சூடனென்றுமூன்றுஞ்சே ர்த்துநிமிஷத்திற்கப்பாலூத்தூதிப்பாரு, பூதிக்கத்திருக்கும்பொன் னெட்டுமாத்து பூலோகம்பேதியடாயிந்தவித்தை, நாதிக்குஞ்சில ம்பொலியில்நடனங்காணும் ரசவாதமானவனேமவுனியாமே. ()

மவுனியடாசகத்திரபேதியிந்த மாற்கமடாரணவீரகெந்தியா லே, கெவுனியடாசித்தர்முதல் தேவரெல்லாங் கிருபையுள்ளவித் தையிதுசேருசேரு, புவனியாம்புவனமிசைவாதுவந்தால் பூட்ட டாயில்லாட்டாலென்னசெய்வாய், அவனியிலேயாருக்குஞ்சொல் லவேண்டாம் ஆதிவித்தையாட்டமடாயாட்டிப்பாரே. (௨௨௬)

ஆட்டவேவெற்றிலையின்மூலிசுட்டு ஆகாசமூலிசுட்டுவேளான் மூலி, நீட்டவேமேனியொடுரெண்டுஞ்சுட்டு நீலநல்லக்கொடிவே லிதானுஞ்சுட்டு, கூட்டவேஊமத்துசமூலஞ்சுட்டுக் குருந்தொட் டியெருக்கிலைசமூலஞ்சுட்டு, வாட்டவேவிஷ்ணுவிலிசமூலஞ்சுட்டு மணியிலையுங்காக்கணமுஞ்சுட்டுப்போடே. (௨௨௭)

சுட்டசுட்டசாம்பலெல்லாம்வெவ்வேறாகச் சொல்லுகிறேன் பாண்டத்திற்கரைத்துவைத்து, பட்டபட்டதெளிவிறுத்து விட்டுக் காய்ச்சிப் பாங்காகவுப்பெடுத்துவெவ்வேறாக, திட்டமிட்டுவைத்தி ருந்துவுப்பையெல்லாம் செந்தூரம்பண்ணவகைதிறமாய்க்கேளு, வட்டவட்டவோட்டிலிட்டுசுரோணிதத்தால் வறுக்கையிலேசகஸ்தி ரபேதிபோடே. (௨௨௮)

பேதியிட்டுவறுக்கையிலேசெந்தூரிக்கும் பிறகெடுத்துத்தாம்பூ ரமுமுருகும்போது, ஆதிவஸ்துயனுதிவஸ்துரெண்டும்விட்டு அப் பனேசெம்பதுதான்தங்கமாச்சு, சோதியொளிவீசுதடா கற்பூரந் தான் சுந்தரம்போலிருக்குமடாபத்துமாற்று, வாதிமகன்வாதவி த்தைசெய்வான்பாரு வயித்தியனேவாதியடாவையகத்தே.(௨௨௯)

வையகத்திற்காரீயமுருகும்போது மைந்தனேவழலையிலே காசுபோடு, பையகத்தில்தூளிக்கும் நீறுவாங்க பரஞ்சோதிசெந்

தூரமிட்டுப்பாரு, மெய்யகத்திற்பத்தனாயுங்காணும்பாரு வீரா சகெந்தியிலுமிதுவேமிச்சம், உப்யகத்திற்கற்பமடா யிதுவேவே ண்டும் உலகத்தில்வாதமென்னவுற்றசேதி. (உ௬ய)

உத்தசெய்திப்பித்தளையைசல்லியாக ஒருதுலாம்நொறுக்கியி ட்டுவுலையின்மீதிற், சுத்திசெய்தகோசலுப்ம்பரிட்டுக்கேளு கொடு க்காயின்புளியிலொருசுற்றிசெய்து, அத்தம்போலுருகையிலேயித் தைப்போடு அம்பலவரதுகயலோநடனஞ்செய்வார், பித்தளையே தங்கமடாபேசமாட்டார்பிரமவித்தைவாதவித்தையாகுந்தானே.()

ஆகுந்தானம்பலவராடுங்கூத்தை ஆரறிவார்வெள்ளீயமப்பா றூறு, வேகுந்தானுருகையிலே வேளைவிந்து விதிவிந்துவிட்டுவி ட்டுசெந்தூரத்தைப், போகுந்தான்கூடவிட்டுவப்பால்பாரு பூதல மேபொன்னுச்சுபூண்டுபாரு, எகுந்தானுனைப்பிடித்த காமமெல் லாம் என்மகனேகயிலாசமேருதானே. (உ௬உ)

மேருதாநாகமொடுவங்கங்கூட்டி மிகுந்ததொருசாதிலிங்கமூ ன்றுங்கூட்டி, பாருபால்புடம்போட்டுதிரும்பியிந்த பருலிங்கநா கவங்கமுருகும்போது, சீருரத்தான்செந்தூரஞ்சேர்த்தாயானால் செகசோதியாகுமடாநீற்கந்நீற்கன், காருரத்தாயுரைத்தபடியானு ஞ்சொன்னேன் கைகண்டவாதமிதுகண்கொள்ளாதே. (உ௬௩)

கண்கொள்ளவெண்கலமும்நிமிளைசத்துக கனக்கவேநூறிட்டு ருகும்போது, பண்டுகொள்ளதொப்பநதம்பாலைவாரு பழுக்கமே டாவதையெடுத்துவாத்திக்கொண்டு, விண்டுகொள்ளசெந்தூரவெ ள்ளைபோடு விருந்துக்குதனிமாற்றுவீசுவீசு, மண்டுகொள்ளவா திகளாய்ச்செய்யப்போமுர் மற்றவனேநீதிகாணுமசகந்தானே.()

மசகமென்னவெள்ளியிலேயிரும்புசேர்த்துமட்டுமட்டாய்ம டக்கியேகுகையிலிட்டு, தசகமென்னகட்டிகாரத்தைப்போட்டு சத் தையொருகளஞ்சியிட்டுதாக்கும்போது,வசகமலம்போலுலையிலூ தும்போது மைந்தனேசெந்தூரமாட்டிப்பாரு, பிசகுவாதொ ருநாளுநிசமேசொன்னேன் பின்னுமொருபிழைப்பேனோ யிது வேசெய்யே. (உ௬௫)

பாஷாணவேதை.

செய்யவேதோதகத்தில்வேதைதானும் செப்புகிறேன்தூளா க்கிவைத்துக்கொண்டு, பையவேதோதகத்தியிலையரைத்துப்படின மாய்குகைசெய்துகுகையினுள்ளே, வையடாபாஷாணங்கட்டியா க-வைக்குமுன்னும்பின்னுமந்தமூலிவேர்த்தூள், தொய்யவேபா ஷாணம்பொதியவைத்துச்சுற்றிமண்குகையாலேபொதித்துவாட்

வார்த்திடவேயெழுசீலைமண்ணுஞ்செய்து மதயானைப்புடமி டவேகட்டிப்போச்சு, சேர்த்திடவேயாறிவிட்டெடுத்துப்பாருசெ யமானகல்லுப்போலிருக்குமப்பா, மாற்றிடவேமுள்ளிச்சார் மூ லைப்பாலோடு மைந்தனேசுருக்கிட்டுவைத்துக்கொண்டு, பார்த்தி டவேநவலோகம்வெள்ளியாச்சுப் பத்தரையாஞ்சரிகைவெள்ளிவித ற்கொவ்வாதே. (௨௩௮)

இதுவும்பாஷாணவேதை.

ஒவ்வாதுவின்னமொருகட்டைகேளு உற்றவெள்ளைக்குன்றி யிலையரைத்துக்கொண்டு, கவ்வாதுகுகைபண்ணிநாலாங்காச்சல்கடி யவெடியுப்பிட்டுகுகையிற்குள்ளே, செவ்வாகபாஷாணக்கட்டிவை த்துத் திரும்பவுமேமேலுமிந்தவுப்பைப்போட்டு, பவ்வாதுபச் சிலையால்குகைமேல்மூடிப்பண்ணியேபின்னுமதில்படினங்கேளே.

படினமென்னகுருவழலைபாஷாணத்தோடே பாதிவைத்து பச்சிலையின்குகையைத்தானே, படினமென்னவெள்ளைமண்கரிசல் மண்ணும் பக்குவமாஞ்செவ்வல்மண்மூன்றுங்கூட்டி, படினமெ ன்னசவாதுபோலரைத்துருட்டி பச்சிலையின்குகையின்மேல்குகை பொதிந்து, படினமாயேழுசிலைமண்ணும்பூசி பண்பாகசெபுட த்திலிட்டிடாயே. (௨௩௯)

இட்டிடவேபுடமாறியெடுத்துப்பாரு என்னசொல்வேன்பா ஷாணக்கட்டுதன்னை, தொட்டிடவேநவலோகம்வெள்ளியாச்சு சுரு க்கிடவேவெள்ளாட்டின்கோமியத்தில், கட்டுடனேசுருக்கிட்டுவை த்துக்கொண்டு கயிலாசமலைவெள்ளிவித்தைக்கெல்லாம், தொட்டி டவேதாம்பூரம்வெள்ளியாச்சு சொல்லிவிட்டேன்பாஷாணக்கட்டு தானே. (௨௪௰)

கெவுரிபாஷாணவேதை.

கட்டானகெவுரியதுகழஞ்சிவாங்கி கவுசிகையின்கோசலத்தி லூறப்போட்டு, திட்டானவெண்கொழுஞ்சியரைத்துமைபோல்சி றுகுகைமேல்மூடிக்கீழ்மூடிசெய்து, பட்டானபாருப்புகுளையிட் டுப் பாங்கானகெவுரியதுநடுவேவைத்து, வெட்டானஅன்பதெரு புடத்தைப்போட்டு வேகுமுன்னேமண்பூசிசீலைசெய்யே. (௨௪௧)

சீலைசெய்துமுன்போலேபுடத்தைப்போட்டு தீயாறியெடுத் துப்பார்கெவுரிகட்டும், வாலையப்பாபரிபூசை புடத்துக்கெல்லா ம் வயிரவற்குஞ்சத்திக்கும்பூசைசெய்து, வேலைசெய்யமுறைக்கெ ல்லாஞ்சுருக்குத்தாக்கு வெள்ளாட்டுஅமரியப்பா தீர்க்கும்பாரு, பாலைவெள்ளியாகுமடாவெள்ளீயத்தான் பாச்சடாமஞ்சாடிகண்டு பாரே. (௨௪௨)

கண்டுபார்கருநாபியெட்டிச்சாற்றில் கடிகைமுப்பதுதாநூ
றப்போட்டு, முண்டுபார்சென்னயெரியிலையனாத்துஉத்தமனேகு
கைபலணிமுங்பாகத்தில், பண்டுபார்கல்லுப்புச்சூழவிட்டுப் பா
ங்கானசெவுரிய ஹநடுவேவைத்து, தொண்டுபார்தெரியாமல்சீலை
செய்து தொண்ணூறுயெருவினிலேபுடத்தைப்போடே. (௨௪௩)

புடம்போட்டுஆறவிட்டெடுத்துக்கொண்டு பூட்டாசுருக்கு
முன்போல்வெள்ளாட்டிநீரில், இடமேதிநீரதுவுமாதியாகும் யில்
லாட்டாலாவினிராவதுவுமாகும், வடம்போட்கள்ளாகும் வஸ்து
வாகும் மக்கனேசிறுநீறுமாகும்பாரு, திடம்போட்டுதாம்பூரமீய
மாகில் சேர்த்துப்பார்கழஞ்சிக்குஒருமாவீயே. (௨௪௪)

ஈயவேகயிலாசகிரியுமாச்சு யென்னசொல்வேன்தெரிசினையு
மேற்கலாச்சு, பாயவேவெள்ளியதுபத்துமாத்துப்பரிசினமாய்வ
ழலையதுபிரகாசிக்கும், தோயவேஅனுபோகியானால்செய்வான் து
ஷ்டருக்குப்புலியாதுபூசைபெற்றி, வாயவேபூசைசெய்துமண்ட
லத்தில் மைந்தனேவாதசித்திகைக்குள்ளாச்சே. (௨௪௫)

கைக்குள்ளாவின்னமொருசேதிகேளு கடியதில்லைப்பாலத
னில்லுடும்புபத்து, மெய்க்குள்ளாய்தில்லைப்பால் குறுணிவிட்டு
வெயிலில்வைக்கசதிபேதியாகும்பாரு, கைக்குள்ளாய்சத்திபெதி
நூற்றுவித்தை கணக்கில்லையிதுசுருப்பம்வைத்தும்பாரு, பைக்கு
ள்ளாயிருந்தமுதற்சில்வுமில்லை படுமுன்னேயென்னசொல்வேன்
பணமிதாச்சே. (௨௪௬)

பணத்துக்குப்பணவிடைதான்தொடுத்துப்பாரு பாஷாண
மொன்பதுமேபேதியாகும், குணத்துக்குநவலோகம்பேதியாகு
ம்கொடுத்துப்பார்கெந்திரசஜாதிலிங்கம், மணத்துக்குஅரிதாரம்சீ
னக்காரம் மைந்தனேபொரிகாரம்பூரம்வீரம், சிணத்திலேபேதி
க்குமற்றமற்ற சேர்மானங்கண்டுநீசேருபாரே. (௨௪௭)

சேற்கவேகனகமரிமூலங்கேளு தெற்குமலைமேல்முளைக்கும்
வருஷிகாலம், பாற்கவேபூமியிலுமுளைக்குமப்பா பார்த்துதானது
பிடுங்கஅடையாளங்கேள், ஆற்கவேதுறட்டிபோ லிலையிருக்கும்
ஆகாசம்பார்த்திருக்குங்கவரொன்றப்பா, நீற்கவேகவரொன்றுஅணை
த்துருட்டி நிலம்பார்க்கிலிலையொன்றிலதிகம்பாரே. (௨௪௮)

அதிகமடாபூவுமில்லைகாயுமில்லை யதுதனக்குவித்துமில்லைசி
ட்டிபோலே, நிதியமடாகுப்பலாய்முளைக்கும்பாரு நீலநிறமாயி
ருக்குங்கடவுதொன்றும், புதியமடாவிம்மூலிகண்டாயானால் பொ
ன்கண்டோம்புதையல்கண்டோமென்றுபோற்றே, கதியுமடாயுண்
டாதமகன்கமூலி கண்டவுடன்தெண் நிட்டுக்கருதுவாயே (௨௪௯)

கருதியேபிடிங்கிதான்கசக்கிமோந்தால்கண்கெட்டுப்போகுமடா ரத்தம்வீழ்கும், சுருதியாலோகமுறைதடவித்தீயிற் சூட்டவேபத் தணைமாத்தாணியாச்சு, பருதியேவெள்ளிசெம்பி லதிகமாத்துப்ப லிக்குமடாபாஷாணங்கெந்திகட்டும், விருதுபோற்சூதமதுகட்டும் பாரு வேடிக்கைகோம்பவடாமூலிவேகம். (௨௫௰)

வேகமென்னகட்டுக்குபேகத்துக்கு விருமூலிசாறுவிட்டுவெ ந்தாற்கட்டும், பாகமென்னலவ்விதங்கள்நவலோகத்தில் படுமுன் னேசுடுமுன்னேபழுக்குந்தங்கம், ஆகமென்னசுக்கானகல்பிரட்டி வைக்க அப்போதுபொரிகாரம்கட்டிக்காரம், சோகமென்னவெள் ளிக்கல்பிரட்டிவைச்சுச்சுகமானநவச்சாரம்சீனக்காரம் (௨௫௧)

காரமெல்லாமிதனாலேயாகும்பாரு கட்டானயெவச்சாரஞ்சவு க்காரங்கள், பாரமென்னகருமணலையுருக்கும்போது கட்டிவார்க ணமரியகுலைகயதாக, வீரமென்னவிரும்பாச்சுத்தாம்பிரவன்னிவெ ணையிலேசாறுவிடு திரளும்ரம்ப, பூரமென்னபசும்பூமணலுக்கு வாறுபோதினிலேதிருவெங்கலமுமாமே, (௨௫௨)

வெங்கலம்போல்துராசத்துருகும்போது விதமானபொன்னி மிளையுருகும்பாரு, வெங்கலம்போல்கல்லென்றதனைத்துமப்பாவி டுமுன்னேயுருகுமடாவேதைவேதை, தங்கமடாயிம்மூலிசாறுபட் டால் சகலசரக்கானதெல்லாந்தங்கமாகும், பொங்கமடாகனகம ரிச்சாறுபட்டால் போலேதான்சொர்னமதுபிறக்கும்பாரே. ()

பிறக்கவேயரிப்பல்லுபுலியின்பல்லுபுருஷமிறுகமபல்லுயா ளிப்பல்லு, சிறக்கமதகரிப்பல்லுசிங்கப்பல்லு சிறுகரடிப்பல்லு டனேகடுவாய்ப்பல்லு, உறக்கவேயித்தனைப்பல்வீரர்பல்லு வொ வ்வொன்றுயயக்கரண்டிதன்னிலிட்டு, இறக்கவேகனகமணிச்சாறு வார்த்து எரிதனிலேபிடித்திடவேயிளகும்பாரே. (௨௫௪)

இளகும்பார்பசுந்தங்கம்போலேகாணும் இதுவெல்லாமொ ன்றுகரோகிரோகி, பழுகும்பார்பசுந்தங்கம்போலேகாணும் பழணு மடாபழந்தங்கம்பசுமைசேரக், குளகும்பார்வெள்ளியொன்றுதா ம்பரமொன்று கொண்டுருகும்போதுபல்விகூட்டிக்கொள்ளு, அ ழகென்றால்முடியாதுபணிதிக்கெல்லாம் ஆகுமடாதட்டாணுக்கணு கும்பொன்னே. (௨௫௫)

அணுகவேயின்னமொருமூலிகேளு அணுரோகமூலியென்பா ர்சித்தரெல்லாம், சிணுகவேமூலிகண்டசிணத்தில்தானே செம்ப ங்கேகம்பெங்கேதெரிகல்லெங்கே, குணுகுவார்வாய்பித்தங் கொ ண்டுதாணுங் கொள்ளுவாருள்ளுக்குப்பயப்படாமல், இணுகுவார் பல்லெல்லாந்தங்கமாமென்றிதிநாமம்நூறுகமூலிபொன்னே. ()

மூலியுடவடையாளமுறையைக்கேளு மொனுமொனுவாயி றையுமடாகிட்டசென்றால், சோலியென்னவேரையுல்டோவுடல் பேதிக்கும் சுரும்பெல்லாம்வேராகுந்தெண்டைக்கார, பாலியா தொருநாளுமிரக்கல்நிற்க பண்ணதுவேயிசைப்பாடு பரிப்பாயப் பா, வாலியடாவூருக்குகொண்டாயானால் வளர்தாரம்பாடவருமு டனேதானே. (உ௬எ)

தானென்னகுளிர்ந்திருக்குந்தங்கந்திரேகம் தளதளக்கும்பா ரடாதங்கமாச்சு, மானென்னசரஸ்வதிநிர்த்தஞ்செய்வாள் மகால ட்சுமியுடனழகுண்டாமப்பா, தேனென்னசகலவசியென்றுசேவி தேகம்பொன்னாகுமடாதேகமாக, ஏனென்றயனுராகமூலிபோக் கை யின்னங்கேள்செயமூலிவெட்டும்பாரே. (உ௬அ)

செயமூலிவிபரம்.

வெட்டும்பார்வெடக்குருசானிப்போல விள்ளுறேன்வெள்ள நத்தைச்சூரிமூலி, கட்டும்பார்கட்டவிழ்க்குந்தலையுமீளுங் கன்ன மிடுங்கண்கட்டுங்கண்மயக்கும், பட்டும்பார்கிடந்தாலுமுயிர்போ காது பாழுடம்புலச்சைய துபண்ணும்பாரு, கிட்டும்பாருங்களு க்குவிதியுண்டாகில் கிடைக்கும்பார்கடைத்தெருவில்விக்கும்பாரே

விக்குமேவெள்ளைநத்தைச்சூரிமூலி வெண்சாவல்பெலிகொடு த்துக்காப்புக்கட்டி, சிக்குமேபால்பொங்கலிட்டுநீயும் சென்றிர வில்சந்திரக்கிராணந்தீண்டி, சத்துமேகிடைத்தபொரு ளதுவெ ன்றெண்ணி சாம்பராணிபுகைகொடுத்துத்தானம்பண்ணி, வெக்கு மேநிறுவாணியாகநின்று வேர்பிடுங்கிமேற்குமுகமாகத்தானே. ()

ஆகத்தான்வெள்ளிசெம்பிற்பொதிந்துநீயும் ஆச்சரியஞ்சிரசு தனிற்குளிசங்கட்டு, மோகத்தாலனேவோருந் தெண்டஞ்செய்வார் முப்பத்துமுக்கோடியாயிரத்துண்டாம், ஏகத்தான்சொல்வதையுந டத்தலாகும் இந்திரனைப்போல்நீயுமொருரிஷியுமாவாய், சாகத்தா னெட்டாதுநத்தைச்சூரி சகலபில்லிவசியமடாதாணிமீதே. (உ௬௯)

தாணியிலேவேர்பொக்கியிலையைக்கொள்ள தான்கசக்கிதாம் பூரமுகத்திற்பெய்ய, இரணியமோநிசமாகுந்தாம்புரந்தங்கம் இது வன்றியிரும்பினிலேபிழிந்தாயானால், முரணியென்னயிரும்புசெ ம்புமுட்டும்பாரு முச்சூடுமயச்செம்புவேதைபாரு, பரணியல் லோகிரணமதுபிடிக்கவேண்டும் பால்போகாதுலையிலிடு லோகந் தானே. (உ௭௦)

லோகமதுதாம்பூரமாகுங்காலம் ரோமரிஷிமகனல்லோரச வாதிக்கு, நாகமதுவயச்செம்பு தாக்கிப்பாரு ராசரிஷிதுனையப்

பாவுலகத்திற்கு, பாகமதுசொர்ன்னமடாவெள்ளைச்சூரி பாம்பணாகும்போலேறும் விடங்கள்லோகம், தாகமுடன்செய்தவனைப்போலேயிந்த தாரணியிலில்லைசன்னாசித்தானே. (௨௯௩)

சன்னாசிமூலியென்றுசாணிலத்தில் தலைவிரித்துநிற்குமடாதவசிமூலம், பின்னாலைசவையாதேதோன்றிலொன்று பிடுங்கிவந்துதடவிவிடுதாம்பூரத்தில்,சொன்னாலுந்தெரியாதோதீபிரசுட்டஞ்சுனைகள்ரெம்பதானப்பாபாருநீயும், பொன்னாகுஞ்சன்னாசிலாடமூலிபூவாதுகாயாதுபிஞ்சுமாமே. (௨௯௪)

பிஞ்சானமூலிகையைப்பிடுங்கிவந்து பேசாதேநவலோகந்தன்னிற்பூசி, அஞ்சாமற்புடம்போட்டாறிப்பாரு ஆதித்தன்போலிருக்குமடையாளந்தான், துஞ்சாதேசோதிமயமாகுமப்பா சேராதேபொய்பிறட்டு சொல்லாதப்பா, கெஞ்சாதேபற்காட்டித்திரியாதேநீ கெம்பீரமாயிருந்தாலும்பாரமாமே. (௨௯௫)

உம்பர்களைப்போலிருக்குங்கருவாகக்கேள் உறைக்கிறேனொருகாயில்ரெட்டைக்காயாம், தம்பமென்னபூக்கறுப்புகாய்கறுப்புதாண்டாகவரவிடாதொருகொப்பாகும், பம்பரமேயாடுமடாவாதவித்தைப்பாரிலேவழிகேளும்பாகாநீயும், கம்பரமேயிலையொத்துக்கருநாயிக்கு கடைரெண்டுமேல்மூடிகீழ்மூடிக்கே. (௨௯௬)

மூடிதனைக்குகைபண்ணிநாபிவைத்து முனையானவழலையிலுப்புகுழவிட்டு,காடிதனைக்கும்புபோல்வுரூந்துசேர்த்துக்கவசமிட்டுபத்தெருவில்புடத்தைப்போடு, கோடிவளாகாணுமடாநாபிபிட்டு-கூறினேனாறியெடுகல்லுகல்லு, மொடியெனவேளைச்சாற்சுருக்கிட்டப்பா மேனியிலுஞ்சுறுக்கிடவேவேதையாமே. (௨௯௭)

வேதையிலுமிச்சமடாரசவாதந்தான் விடுகின்றகருவாகைச்சாற்றினோம்டே, நாதவிந்துசேகரித்துக்கும்புபண்ணி நவலோகம்நவபாஷாணத்தைக்கேளு, சாதியடாமுதற்சாதியாகுமாகுந் தயவுடனேமேவியேசாதிப்பாரு, பூதமடாபெண்ணாச்சுநாதவித்தைப்[illegible]டினேன்கருவாகைப்பிஞ்சுதானே. (௨௯[illegible])

பிஞ்சென்னயஞ்சென்னபிஞ்சுபிஞ்சு பேரிலாகொடியிட்டபிஞ்சுபிஞ்சு, நஞ்சென்னசெங்கொட்டைபாஞ்சநஞ்சு நாளையிலேதிருமுருகானநஞ்சு, பஞ்சென்னவெட்டாதேயின்மேலென்னபாதகமேசெய்யாதேபதனமப்பா, துஞ்சிலேவிளக்கிலேனகுருடனப்பா சொர்ப்பனமுண்மைக்குதோத்திரத்தினாலே. (௨௯௯)

தோத்தாவிகருவாகைப்பிஞ்சுவாங்கி சுயம்பிலேபிரதிநிஷ்டைசெய்துக்கொண்டு,நார்த்திசையுங்கூட்டியொருமையாய்ப்பண்ணி

நறுங்கொழுப்பிநெய்விட்டுகெட்டுமைபோல், பார்த்திமையின்கண்ணப்பாயிழங்குஞ்சிக்கு படுவாதிநாளப்பாபடினஞ்சொன்னேன், மாத்ததிகப்பொன்பிறக்கும் நவலோகத்தில் மாட்டிப்பார்கருவாகைப்பன்றிநெய்யே. (௨௭௰)

பன்றியிலேபனிரெண்டுவாண்டுசென்று பாரடாபிஞ்சஞ்சிற்பாருபாரு, குன்றியிலேவெண்குன்றி வெண்கொ[illegible]ஞ்சி குமரியிலேசிவந்தவர்ணங்கொடிவேலிநீலம், நன்றிகெட்[illegible]பய்களுக்குச்சொல்லப்போமோ நாதாக்கள்மறைத்தபொருள் நாட்டிலப்பா, வென்றியல்லோமேலதிகம்பாருபாரு வேதைக்குவின்னமொருமேருகேளே. (௨௭௧)

மேரினிலேயிருந்தமருந்தெங்குமுண்டு விரிவுண்டுவகலமுண்டுவுயரமுண்டு, பாரினிலேயிறந்துண்டுபிறந்ததுண்டு பார்த்தெடுத்தப்பெரியோர்கள்ரொம்பவுண்டு, தேரினிலேயிரதமொன்றுசெய்ததுண்டு சேர்த்துப்பாரப்புடனேயுப்புங்கூட்டி, வேரினிலேநீரைவிட்டுக்குளிர்ச்சிப்பண்ணு வேதாந்தநாதவொளிகாணும்பூவே. ()

பூவென்னசிறுநாகப்பூவேவேண்டும் பூத்திருந்தால்மணம்வேண்டும்வாசம்வேண்டும், பாவென்னகலைபிரிவுபண்ணவேண்டும் பாவையிலேதிருவுருப்போல்பண்ணவேண்டும், கோவென்னகாரானைக்குட்டிவேண்டும்கொடுமைக்குகுருபீடமிருக்கவேண்டு, மேவென்றால்மாவேரிமேயவேண்டும் விதியற்றமடையருக்குவீணும்பாரே.

வீணல்லமெய்யல்லபொய்யுமல்ல மேலல்லகீழல்லநடுவுமல்ல, நானல்லயம்பல்லவில்லுமல்ல நானல்லநீயல்ல நாதனல்ல தூணல்லதுரும்பல்லதூரமல்ல சூடல்லகுளிர்ச்சியல்லமேகமல்ல, ஆணல்லபெண்ணல்லஅலியுமல்ல ஆரல்லஊரல்லவொன்றுதானே.

ஒன்றானபூரணமேவாதமாகும் உரைத்ததெல்லாமுண்டாக்கியுருவுமாக்கி, நின்றானயேகநிற மயமாய்த்தானே நிர்மலமேபேரொளியாய்நாதாந்தத்தில், குன்றாமற்கோணமற் குறிதப்பாமல் கூகூவேதாவேகூகூவென்று, அன்றாகியின்றாகியாதியாகி ஆதாரமாறுக்குளப்பாபாரே (௨௭௫)

அப்புருட்டிபச்சிவனமூலத்தோடே அனவர்ச்சிபச்சிலையின்மூலங்கூட்டு, செப்புருட்டுவிளையாட்டும்பந்துபோலே தேவபட்சிமூலட்டுவோதிப்பாரு, வெப்புருட்டிவெள்ளைசெம்[illegible]ல தாக்கிப்பாரு மீறியேமிகுத்தமாதராகும்பாரு, துப்புருட்டிபாதாளமூலிவேகம் சொல்லிவிட்டேன்மதகரியும்வணங்கும்பாரே. (௨௭[illegible]

வணங்கியேதெய்வீகப்பூடொன்றுண்டு மருக்கொழுந்துவா சமடாமகாவேர்மூலி, இணங்கியேபறித்துவந்து துலைதூரத்தில் இருந்தல்லோபாங்காட்டிலிருக்குதப்பா, சுணங்கியேபச்சிலைக்குக் காப்புக்கட்டி சுட்டுப்பார்மாவெல்லாஞ் சுட்டமாவே, குணங்கி யேகுணக்கிலேவோதாரட்டை கூசாமல்நூற்றுப்பார்பணமேபொ ன்னே. (உளஎ)

பொன்ன விபுட்பவனங்காணமாட்டார் பூசைமுப்பூமுடிக் கறியீர்பொன்மனதப்பா, என்னுடமையுன்னுடமை யென்றுவீ ணே இடும்புசண்டையிஷ்டவேவேண்டாமப்பா, தன்னுடமைதன க்கில்லையென்றுவிட்டு தசகெட்டுநூலாகிசாகவேண்டாம், உன்னு டைமையென்னுடைமையுரைக்கக்கேளு உத்தமனேகச்சோலமெ ன்றுவாங்கே. (உளஅ)

ஒன்றென்றுலொன்றல்லரண்டுமல்ல உற்றதொருமூன்றல்ல நாலைவாங்கி, இன்றேநீயிம்மென்றுதியானஞ்செய்து இறக்கிடவே பெரியாட்டித்தயிலம்வாங்கி, அன்றென்னச்சொன்னதொருபாகம் போலேஅறையப்பாலவேலிச்சாறுவிட்டு, கன்றுனேமுகன்பூசை மையேவாதங்காட்டுமடாதடவுமுன்னேநவலோகத்தார். (உளகூ)

லோகத்தாநான்முகனுர்கொடுத்தமையை ரோமம்போல்தட விபளவிட்டுப்பாரு, வேகத்தையென்னசொல்வேன்தங்கமாகுமே லானநாவானபிண்டவேதை, நாகத்தின்விடமிதற்கு வாராதப்பா நான்முகமும்நாற்றிசையாயிருந்தமைதான், பாகத்திற்பெண்ணை வைத்தவீசன்தானும் பகர்ந்தபடியாருக்கும்பகர்ந்திட்டேனே. ()

பகர்ந்தகருவண்டாண்டந்தாண்டியோடும் பாதாளமூலிகை யின்மையதாச்சு, உகந்தகன்னிகையழித்தால்பாதாளத்தில் உள்ளி டவேகாணுமற்போட்டமூலி, சிகந்தனிலேயாவருக்குங்கிட்டாதப் பா செகசாலவாதமடுத்தெட்டுதட்டு, பகர்ந்தாலுந்தலைவெடிக்கு மனைச்சிணத்தில் பத்தியுடன்சத்தியமாய்ப்பாருசேவி. (உஅக)

சேவிபுடாயாவனையும்வணங்கிச்சேவி திருஷ்டிவித்தநான் முகப்பச்சிலையைத்தின்றால், ஆவியொருக்காலமுங்கழியாதப்பா யா வியுயிரந்தவனைதீற்கமுண்டு, பூவினிலேயிவ்வசனம் பொய்யாதி ல்லை புடவிலேவாதமதுபொன்பொன்னாகும், தேவியிவள்சிவகா மிதீர்க்கந்தீர்க்கம் திப்பிலிகற்பூரமடாதங்கந்தானே. (உஅஉ)

தங்கவிலைதெரியாதயாளியில்லை தட்டானும்பட்டானேநா லுமாதம், பொங்கியுன்ன அசுயுங்கில்லைகன்னம்வைக்கப் பூருபந்தெ

உ

சிவமயம்.

அகத்தியமுனிவரருளிச்செய்த

வயித்தியகாவியத்தின்

பொருளட்டவணை.

பொருள்.	பக்கம்.
அ	
அசுவ... நெய் ...	௬௫
அசு... சூரணம்...	௱௰௭
அசு... கந்திதயிலம் ...	௱௭௫
அதிவாதிசூரணம் ...	௨௱௯
அஞ்சனம்...	௯௫
அஞ்செண்ணெய்த்தயிலம்-	௱௪
அசுவிடையசூரணம் ...	௱௯௮
அப்பிரகசுத்தி	௰௫
அப்பிரகசெந்தூரம் ..	௰௮
அப்பிரகசெந்தூரம்......	௯௫
அப்பிரகசெந்தூரம்......	௱௪௰
அமிர்தசஞ்சீவிகுளிகை ...	௰௯
அமிர்தசஞ்சீவிநெய்	௪௭
அமிர்தசெந்தூரம்........	௭௮
அயப்பொடிசுத்தி..........	௰௪
அயஞ்திவடகம்	௱௬௨
அரக்குச்சந்தஞதி.........	௫௬
அரக்கெண்ணெய்	௨௱௬
அரிதாரபற்பம்...........	௭௭
அரிதாரப்புகை	௱௮௮
அருளாதிகியாழம்..........	௱௰௧
அரையாப்புக்கு.........	௱௨௭
அர்த்தநாரீச்சுரம்	௭௨
அனல்சூரணம்	௯௰
அஷ்டகுன்மலேகியம்...	௱௬௧
அஷ்டசந்தநெய்	௬௯
அஷ்டசூரணம்	௱௰௯

பொருள்.	ப[க்கம்.]
ஆ	
ஆடாதோடைநெய்	
ஆடாதோடைக்கிருதம்...	
ஆனந்தவயிரவம்	
ஆனந்தவயிரவம்	௮...
இ	
இரசபூபதி	௨...
இரசகற்பூரம்...............	எ...
இரசபற்பம்...............	௭...
இரசாயனவயிரவம்	
இரசசூலைக்கு..............	க...
இரத்தபித்தகுன்மத்துக்கு	௱௬...
இரசசெந்தூரம்	௱௪...
இரசபற்பசெந்தூரம்...	௱௪...
இரசகற்பூரம்	௱௯...
இராஜமிருகாங்குசம்	௨௱...
இருமல்புகைக்கு	
இளநீர்நெய்	௱...
ஈ	
ஈசுரபூபதி..............	௱௫...
ஈட்டுவகைதீர...............	எ...
உ	
உருக்குச்செந்தூரம்......	௰௯
உருத்திரவயிரவம்.........	௫௯
உருத்திரவிஷக்கலிகம்......	௯௰
உருக்குச்செந்தூரம்	௮௰
உளமாந்தைபெட்டுக்குங் கண்டங்காரிநெய் ...	௬௨

பொருளட்டவணை.

பொருள். பக்கம்.

எ

எண்ணெய் ... ௭௰
எலிவிஷசுத்தி-நாவிசுத்தி ... ௰௪

ஏ

...ண்டவெண்ணெய் ... ௱௨௧
...ண்டச்சலவையெண்ணெய் ௱௭௫
...ாதிகிருதம் ... ௩௧
...திதயிலம் ... ௱௰௪
...திசூரணம் ... ௱௰௬
...திமாத்திரை ... ௱௭௯

க

...ல்நுரைத்தயிலம் ... ௫௫
...ண்ணோய்வகை ... ௰௧
கண்டாத்திரிலேகியம் .. ௱௨௩
கதலிகந்தகிருதம் ... ௩௪
கபாடலேகியம் ... ௱௯
கபாடசூரணம் ... ௱௯
...பாடநெய் ... ௱௰
...ப்பான்சிலந்தி ... ௬௮
...லியாணகிருதம் ... ௪௮
...லியாணமயனம் ... ௪௯
...ல்லடைப்புக்கு ... ௯௨
...வுரிசிந்தாமணிசெந்தூரம் ௱௰௩
களிம்பு ... ௪௪
களிம்பு ... ௪௮
களிம்பு ... ௱௮௪
...ற்பூரசிலாசித்தி ... ௰௬
கற்பமுறை ... ௨௨௰

கா

...சக்குடோரி ... ௱௬௩
காந்தசுத்தி ... ௰௫
காந்தசெந்தூரம் ... ௰௭
காமரசம் ... ௨௨௪
காரீயச்செந்தூரம் ... ௨௯
காரீயச்செந்தூரம் ... ௱௪௰
காரீயச்செந்தூரம் ... ௱௫௩
...த்திரன் ... ௨௧
...வுமாதம், பெ,

பொருள். பக்கம்.

காலாந்தவயிரவம் ... ௭௰

கி

கியாழம் ... ௩௰
கியாழம் ... ௩௩
கியாழம் ... ௪௬
கியாழம் ... ௪௬
கிராணிக்கனுபானம் ... ௭௬
கிரிச்சினங்கட்கு ... ௯௧

கு

குக்கில்சுத்தி ... ௰௫
குக்குடசூரணம் ... ௱௰௭
குக்கிலாதிவடகம் ... ௱௨௬
குட்டவகைதீர - அக்கினிகுமாரி ... ௱௫௬
குண்டலாதிலேகியம் ... ௨௱௩
குமரித்தயிலம் ... ௨௱௫
கும்மட்டிக்காய்குழம்பு ... ௫௭
கும்மட்டிக்காய்ச்சூரணம்-௫௮
குன்மம்வரலாறு ... ௯
குன்மகுடோரி ... ௨௬
குன்மத்திற்குமூலிகை ... ௫௮
குன்மத்துக்கு ... ௱௩௪
குன்மவாயுவுக்கு ... ௱௮௧
குஷ்டவகை ... ௰௨
குஷ்டத்திற்கு ... ௨௱௰

கெ

கெந்தகசுத்தி ... ௰௩
கெந்தகத்தயிலம் ... ௬௧
கெந்தகத்தயிலம் ... ௱
கெந்ததாளிநெய் ... ௱௨௪
கெர்ப்பசன்னி ... ௰௧
கெற்பக்கோள் ... ௱௬௪

கோ

கோடாகோடிகுளிகை ... ௮௨
கோலரக்குக்கியாழம் ... ௫௬

ச

சகலதன்மக்குளிகை ... ௨௭
... பூ...